Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2021-23

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry

# The Gazette of Puducherry

**PART - I**

**சிறப்பு வெளியீடு** **EXTRAORDINAIRE** **EXTRAORDINARY**

அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **திங்கட்கிழமை** | **2022 ஞூ** | **சூலை மீ** | **11 உ** |
| **No.** | **84** | **Poudouchéry** | **Lundi** | **11** | **Juillet** | **2022 (20 Asadha 1944)** |
| **No.** | | **Puducherry** | **Monday** | **11th** | **July** | **2022** |

புதுச்சேரி அரசு

**தேர்தல் துறை**

*எண் தே. 135/2022-573.*

*புதுச்சேரி, 2022-ஆம் ஆண்டு, சூலை மாதம், 11-ஆம் தேதி.*

இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான தேர்தலில், தேர்தல் ஆணையத்தின் எண் 479/2022(1), 15-06-2022-ஆம் தேதியிட்ட அறிவிக்கையின்படி வாக்களிக்கும் வாக்காளர் குழுவின் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாக்களிக்கும் இடங்களுக்கு மாற்றாக வேறு இடங்களில் வாக்களிக்கும் வசதியை பயன்படுத்த தேவைப்படும் குறைந்தபட்ச நாட்கள் குறைக்கப்பட்டதற்கான இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 479/2022(1), 11-07-2022-ஆம் தேதி அறிவிக்கப்பட்டவாறு, பொதுமக்கள் தகவலுக்காக மீண்டும் வெளியிடப்படுகிறது.

**ல. குமார்,** இ.ஆ.ப.,
தலைமைத் தேர்தல் அதிகாரி.

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

*நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110 001,*
*2022-ஆம் ஆண்டு, சூலை மாதம், 11-ஆம் தேதி/*
*ஆசாத மாதம், 20-ஆம் தேதி, 1944 (சக).*

அறிவிக்கை

எண் 479/2022(1): - குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல், 1974, சட்டத்தின் விதி எண் 7-ன் படி, குடியரசுத் தலைவர் தேர்தல் 2022-க்கான அதனுடைய 15-06-2022 தேதியிட்ட அறிவிக்கை எண் 479/2022(1)-ன் படி, தேர்தல் நடைபெறும் இடம் மற்றும் அவ்விடத்தில் தேர்தலில் வாக்களிக்கும் தகுதி வாய்ந்த வாக்காளர்களை அறிவித்துள்ளது என்பதாலும்;

அவ்வறிக்கையின் குறிப்பில் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்கூறிய அறிவிக்கையில் குறிப்பிட்டபடி வாக்குச்சாவடியைத் தவிர்த்து வேறு வாக்குச்சாவடியில் வாக்களிக்க விரும்பினால், அதற்கு அவர்கள் தேர்தல் ஆணையத்திடம் நேரடியாக இதற்குரிய பிரத்யேக படிவத்தை பூர்த்தி செய்து வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் பத்து நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பதாலும்;

இந்தியத் தேர்தல் ஆணையமானது மேற்கூறிய நிபந்தனையான, முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டிய 10 நாட்களை தளர்த்த முடிவு செய்திருப்பதாலும்;

எனவே, தற்பொழுது இந்தியத் தேர்தல் ஆணையம் பாராளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து மேற்சொன்ன வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முன்பான பத்து நாட்களுக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்களையும் சூழ்நிலையின் அடிப்படையில் பரிசீலனை செய்தும், அதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யத் தேவையான கால அவகாசத்திற்கு உட்பட்டு, அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கான வாக்குச்சாவடி அல்லாத வேறு வாக்குச்சாவடியில் வாக்களிக்க அனுமதி வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

(ஆணைப்படி)

**சுமன் குமார் தாஸ்,**
செயலர்.

---

GOVERNMENT OF PUDUCHERRY

**ELECTIONS DEPARTMENT**

*No. E. 135/2022-573.*

*Puducherry, the 11th July 2022.*

The Notification No. 479/2022(1), dated 11-07-2022 of the Election Commission of India in connection with the extension of time limit for exercising option by the Members of Electoral College to Vote for the Presidential Election in the places other than alloted place notified *vide* Notification No. 479/2022(1), dated 15-06-2022, is republished for the information of general public.

**L. KUMAR,** I.A.S.,
Chief Electoral Officer.

**ELECTION COMMISSION OF INDIA**

*Nirvachan Sadan, Ashoka Road, New Delhi-110 001,*
*Dated the 11th July, 2022, Ashadha 20, 1944 (Saka).*

NOTIFICATION

No. 479/2022(1): - Whereas, the Election Commission of India, in connection with conduct of Presidential Election, 2022, has notified under Rule 7 of the Presidential and Vice-Presidential Elections Rules, 1974 *vide* its Notification No. 479/2022(1), dated 15th June, 2022, the Place of polling and Group of electors who will be entitled to vote at those places of poll; and

Whereas, in the Note to the said Notification, a limit of 10 days before the date of poll has been fixed, before which any Member of Parliament/Member of Legislative Assembly, on account of exigency for special circumstances, has to intimate if, he/she desires to vote at place of polling other than the one notified for his/her group, by directly applying to the Election Commission of India in the prescribed format; and

Whereas, the Commission has decided to liberalise the abovesaid stipulation of 10 days' prior intimation in case of extreme urgent situation;

Now, therefore, the Commission has decided that the requests for the aforesaid purpose, received in the Commission, even after 10 days before the date of poll, if any, may be considered by the Commission based upon the circumstances of individual case and allow such Member of Parliament/Member of Legislative Assembly to cast vote at place of polling other than the one notified for his/her group, if, there is sufficient time available for making necessary arrangements in this regard.

(By order)

SUMAN KUMAR DAS,
Secretary.

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* the Director, Government Press, Puducherry.